கார்த்திகை (93)

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

4

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 01 (16-11-98) செவ்வாய்க்கிழமை ஓசை 271

## கடற்கரும்புலிகளின் உருவப்படங்கள் இன்று ஊர்வலமாக வரும்

பூநகரி கடற்படைத் தாக்குதலின் வெற்றிக்கு வித்தாகிய கடற்கரும்புலிகளான மேஜர் கணேஸ் ( நாகநாதி ஜீவநேசன், நவக்கிரி, புத்தூர் மேற்கு ) மேஜர் கோபி (சுப்பிரமணியம் செல்வலிங்கம், பல்லவராயன்கட்டு, மன்னார்) ஆகியோரின உருவப் படங்களை தாங்கிய அலங்கார ஊர்தி இன்று மக்கள் அஞ்சலிக்காக ஊர்வலமாகஎடுத்துச் செல்லப்பட வுள்ளது. மேற்படி கடற்கரும்புலிகளின் உருவப்படங்களைத் தாங்கிய அலங்கார ஊர்தி இன்று காலை 9 00 மணிக்கு நவக்கிரி புத்தூரில் அமைந்துள்ள மேஜர் கணேசின் இல்லத்தில் ஆரம்பமாகி நவக்கிரி, புன்னாலைக் கட்டுவன், சுன்னாகம், மானிப்பாய், ஆனைக்கோட்டை, நாவாந்துறை, குருநகர், அரியாலை, கண்டி வீதியூடாக, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறை சென்றடையும். நண்பகல் 2.30ற்கு அங்குள்ள இன்பருட்டி சனசமூக நிலையத்தில் (4ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரி மீது மிலேச்சத்தனமான குண்டுவீச்சு!

## வார்ட் சேதம்; கடைகளும் நாசம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மீது சிறிலங்கா விமானப்படையின் ''சுப்பர் சொனிக்'' விமானங்கள் இரண்டு குண்டுத்தாக்குதல் மேற்கொண்டதில் வைத்திய சாலைக் கட்டடம் பலத்த சேதங்களுக்குள்ளானது. ஒருவர் பலியானார். ஐந்துக்கும் மேற்பட்டோர் பலத்த காயங்களுக்குள்ளானார்கள்.

நேற்றுக்காலை 11.15மணியளவில் வானத்தில் பேரிரைச்சலுடன் சுற்றிச் சுழன்ற இரு விமானங்களும் வைத்திய சாலையை நோக்கி குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தின.

இத்தாக்குதலின்போது வைத்தியசாலையின் 5ஆம் வார்ட்டில் இரு குண்டுகளும் நுழைவாயில் பகுதியில் இரு குண்டுகளும் வீழ்ந்து வெடித்து சிதறின.

இத்தாக்குதலின்போது மகப்பேறு வார்ட் பெரும் சேதங்களுக்குள்ளானது. ஏனைய வார்ட்டுகளும் சேதங்களுக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி வைத்தியசாலையின் சமையலறை, உள் நோயாளர் சிறுவர் விடுதி, பெண்கள் விடுதி, ஆண்கள் விடுதி என்பன பலத்த சேதமடைந்தன. தாதியர் விடுதியும் களஞ்சிய அறையும் முற்றாக நாசமாகின.

குண்டுவீச்சிற்கு இலக்கான ஆஸ்பத்திரியின் கூரையில் செஞ்சிலுவை அடையாளமும் வளவில செஞ்சிலுவை கொடிகளும் பறககவிடபபட்டிருந்தன. முதற்தடவை நடந்த குண்டுவீச்சில லக்சுமி தனி (4 ஆம் பக்கம் பார்க்க)

# இளம் தாய் பலி 6 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை மீது சிறிலங்கா விமானப் படையின் ''சுப்பர் சொனிக்'' குண்டுவீச்சு விமானங்கள நேற்று மேற்கொண்ட தாககுதலில் தயாபரன் பரமேஸ்வரி (19) என்ற இளம் குடும்பபெண் பலியானார்.

இவர் நேற்று முன்தினம் இரவு குழந்தை ஒன்றை இந்த வைத்திய சாலையில் பிரசவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குழந்தை எதுவித காயமுமின்றி மயிரிழையில் உயிர்தப்பியது என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி இளம் தாயார் அம்பாள்குளம் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்.

இச் சம்பவத்தின்போது காயமடைந்த ஆறு பேரின் விபரம் வருமாறு;

திருமதி மகேந்திரராசா (மருத்துவதாதி), கமலேஸ்வரன் (மருந்துக்கலவையாளர்) சுப்ரமணியம் (ஓவசியர்), பிள்ளையான் (52), (சுத்திகரிப்பாளர்), தர்மலிங்கம் (சாவகச்சேரி), கனிஷ்ட வித்தியாலய மாணவனாகிய யோகநாதன் ஆகியோரேகாயமடைந்தவர்களாவார்கள்.

இவர்கள் அனைவரும் உடனடிச் சிகிச்சைக்காக வேறு வைத்திய சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இத் தாக்குதல் சம்பவத்தை அடுத்து கிளிநொச்சி நகரம் பரபரப்படைந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது.

# தெற்கில் இனக்கலவரம் வெடிக்கும் அபாயம்; அமைதி காக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை!

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

பூநகரிப் பகுதியில் சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தென்னிலங்கையில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இனக்கலவரம் ஒன்று வெடிக்கக் கூடிய அபாய நிலை உருவாகியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதைத் தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது இதேவேளை சிங்கள மக்களை அமைதி காக்குமாறும், பூநகரியில் காயமடைந்த படையினரைப் பராமரிப்பதற்கு உதவுமாறும் டி. பி. விஜேதுங்க கோரியுள்ளார்.

பூநகரியில் ஏற்பட்ட பேரிழப்பு

# இராணுவ வரலாற்றில் மோசமான பின்னடைவு

[கொழும்பு]

...ணுவ வரலாற்றில் மிகமோச... இராணுவ...

# அமைதி காக்குமாறு ஜனாதிபதி கோரிக்கை!

## பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

(கொழும்பு)

**பூநகரிப் பகுதியில் சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தென்னிலங்கையில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இனக்கலவரம் ஒன்று வெடிக்கக் கூடிய அபாய நிலை உருவாகியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதைத் தொடர்ந்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது இதேவேளை சிங்கள மக்களை அமைதி காக்குமாறும், பூநகரியில் காயமடைந்த படையினரைப் பராமரிப்பதற்கு உதவுமாறும் டி. பி. விஜேதுங்க கோரியுள்ளார்.**

பூநகரியில் நடைபெற்ற தாக்குதலில் சிங்கள இராணுவம் முன்ஒருபோதுமில்லாத அளவு உயிர்ச்சேதத்தைக் கண்டுள்ளதைத்தொடர்ந்து கொழும்பில் இனவன்முறைகள் வெடிக்கும் அபாய நிலை தோன்றியுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

1983இல் 13சிங்கள படையினர் கொல்லப்பட்டதையடுத்து தமிழருக்கு எதிராக தெற்கில் வன்முறை வெடித்ததை சுட்டிக்காட்டிய இச் செய்திகள் இம்முறை இத்தகைய கலவரங்கள் ஏறபடாது தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டது.

தலைநகரில் பொலிசாரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் இதன் பொருட்டு தீவிரமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வவுனியாப் பகுதியிலும் சிங்களவருக்கும், தமிழருககும் இடையில முறுகல் நிலை தீவிரப்பட்டு வருவதாக பி. பி. ஸி தெரிவித்தது.

இதேசமயம் சிங்கள மக்களை அமைதி காக்கும்படி சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க வேண்டுகோள்விடுத்துள்ளார். பூநகரி முகாம் விடுதலைப் புலிகளால் தகர்த்தெறியப்பட்டதைத்தொடர்ந்து தென் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளதனால் அவர் இவ் வேண்டுகோளை வானொலி மூலம் விடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது

"தற்போது மக்கள் அமைதியாக இருப்பதன் மூலமே காய

[4ஆம் பக்கம் பார்க்க)

### இணைப்பு

பூநகரி முகாம் தகர்ப்பு வரலாற்றுச் சமரில் முதல் நாள் சண்டையின் போது வீரச்சாவடைந்த போராளிகளின் விபரம் உள்ளே.

பூநகரியில் காயமடைந்தோரை பார்வையிட

## கொழும்பு ஆஸ்பத்திரிக்கு உறவினர் படைஎடுப்பு

(கொழும்பு)

பூநகரி முகாம் தகர்ப்பில் காயமடைந்த இராணுவத்தினர் தற்போது ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படுவதையடுத்து அவர்களது உறவினர்கள் ஆஸ்பத்திரிகளுக்கு படையெடுத்து வருகின்றனர்.

கொழும்பிலுள்ள இராணுவ ஆஸ்பத்திரி மற்றும் கொழும்பு அரசினர் ஆஸ்பத்திரி, நவலோகா, சிறிஜெயவர்த்தனபுர, அநுராதபுரமஆஸ்பத்திரிகளுக்கே இவ்வாறு படையினரின உறவினர்கள் படையெடுத்துச் செல்கின்றனர்.

காயமடைந்த இராணுவ அதிகாரிகளும் மோசமாக காயமுற்ற படையினரும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த படையினர் மீட்புப் பணி முடிந்தது

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் காயமடைந்த படையினரை மீட்கும் பணி பூர்த்தியடைந்துவிட்டதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன தெரிவித்தார் பூநகரிக்கு அனுப்பப்பட்ட மேலதிக படையினர் காயமடைந்த படையினரை மீட்டு அவர்களை விமான மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

பூநகரியில் காயமடைந்து தற்போது மீட்கப்பட்டுள்ள

நளின் அங்கமன

பல படையினர் கொழும்பு இராணுவ ஆஸ்பத்திரி உட்பட பல ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு தேவையான மருத்துவப்பொருள்கள் போதியளவு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. சுகாதார மகளிர் விவகாரத் துறை அமைச்சர் ரேணுகா ஹேரத் நேற்று இராணுவ ஆஸ்பத்திரிக்கு விஜயம்செய்து காயமடைந்த படையினரை பார்வையிட்டார்.

## உடன்பணிக்கு வருமாறு டாக்டர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

பூநகரி தாககுதலில் காயமடைந்த இராணுவத்தினர் கொழும்பு கொண்டுவரப்பட ஆரம்பித்ததையடுத்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் பொருட்டு கொழும்பு வைத்தியசாலை மருத்துவர்களையும், தொண்டர் மருத்துவர்களையும உடன் பணிககு திரும்புமாறு சுகாதார அமைச்சு நேற்று வேண்டுகோள் விடுத்தது.

நேற்று வானொலி மூலம் விடுக்கப்பட்ட இவ் அழைப்பில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேவைவரின் வெளிநாட்டு வைத்தியர் மூலம் சிகிச்சை

பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

பூநகரி தாக்குதலில் காயமடைந்து தற்போது கொழும்பில் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள படையினருக்கு தேவையேற்படும் பட்சத்தில் வெளிநாட்டு வைத்தியர்கள் மூலம் சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே சமயம் கொழும்பு, அநுராதபுர வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள

( 4ஆம் பக்கம் பார்க்க)

பூநகரியில் ஏற்பட்ட பேரிழப்பு

## இராணுவ வரலாற்றில் மோசமான பின்னடைவு

[கொழும்பு]

பூநகரியின் தற்போதைய நிலைகுறித்து அதிகாரிகள் நிம்மதி கொண்டாலும் இச் சண்டை சிறிலங்காவின் இராணுவ வரலாற்றில் மிகமோசமான பின்னடைவாகும் என பி பி ஸி. தெரிவித்தது.

இச்சமரின் போது பல அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர். சிறிலங்காவின் வரலாற்றில் இவ்வளவு தொகை கடற்படை, இராணுவ அதிகாரிகளை இழந்துள்ளமையை நிவர்த்தி செய்ய பல வருடங்கள் செல்லும் என இராணுவ உயர் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் பூநகரி முகாம் மீது நடாத்திய தாக்குதலில் 500 படையினர் பலியாகினர், 400 பேர் படுகாயமடைந்தனர் என்பதனை இராணுவ வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன. காயமடைந்தவர்களில் 120 பேர் ஆபத்தான காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். 250 படையினர் படுகாயமடைந்தனர் என அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

இதேவேளை இச்சமரில் 250 கடற்படை, இராணுவத்தினரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் மேலும் 500 பேர் காணாமல் போயிருப்பதாகவும் இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

### வீரச்சாவு

பூநகரி இராணுவ முகாம் பகுதியில் கடந்த 24 10 93 அன்று இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் இரு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். லெப்டினன்ட் செங்கண்ணன் / சத்தியராஜ்

(4 ஆம் பக்கம் பார்க்க)



லெப். செங்கண்ணன் ( சத்தியராஜ்)



லெப். திண்ணியன் (ரங்கா)

## யாழ். கடல்நீரேரியில் படையினர் சடலங்கள்

பூநகரி- நாகதேவன்துறை கூட்டுத்தளம் மீது புலிகள் நடாத்திய தாக்குதலின்போது கொல்லப்பட்ட பல படையினரின் சடலங்கள் யாழ். கடல் நீரேரியில் மிதந்துகொண்டிருப்பதாக சிறிலங்கா பாதுகாப்புப்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இத் தாக்குதலின் போது கொல்லப்பட்ட பலரின் சடலங்கள் மீட்கப்படவில்லை எனவும் அவையே கடலில் மிதப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

## பூநகரிக்கு வந்தவர்கள் பலாலியுடன் திரும்பினர்

பத்திரிகையாளருக்கு ஏமாற்றம்

பூநகரி இராணுவமுாகமுக்கு நேரில் அழைத்துச் சென்று காட்டுவதாக இராணுவ அதிகாரிகளால் அழைதது வரப்பட்ட தென்னிலங்கை பத்திரிகையாளர்கள் பலாலி விமான நிலையத்தில் வைத்து மீண்டும் கொழும்பிற்கு திருப்பியனுப்பப்பட்டனர்.

பூநகரிக்கு மேலதிக படைகள் அனுப்பப்பட்டதையடுத்து அங்கு பத்திரிகையாளர்கள் அழைத்துச் செல்லப்படுவர் என பாதுகாப்பு அமைச்சு நேற்றுமுன்தினம் அறிவித்தது. இதையடுத்து பத்திரிகையாளர் குழு ஒன்று நேற்று படையினரால் பலாலி விமானத்தளம் அழைத்து வரப்பட்டது திடீரென படை அதிகாரிகள் பத்திரிகையாளர்கள் பூநகரிக்கு செல்லமுடியாது எனக்கூறி அவர்களை மீண்டும் கொழும்பிற்கு அனுப்பிவைத்தனா.

இதேசமயம் கொழும்பு திரும்பிய பத்திரிகையாளர்கள் தாம் பலாலி விமானத்தளத்தில் காத்துநின்றபோது பூநகரியில் காயமடைந்த பெருமளவு படையினர் பலாலி கொண்டுவரப்பட்டுக்கொண்டிருந்ததை நேரில் கண்டதாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்னைக்குண்டு

சகல வசதிகளும் கொண்ட காணியும் (2 பரப்பு) வீடும் (திருநெல்வேலி சந்தைக்கருகாமையில்) விற்பனைக்குண்டு தொடர்பு: திருமதி வனிதா தேவி விவேகானந்தம் (C/O சோமசுந்தரம்) செம்பாட்டு லேன் [வீரவேங்கை ஜெயராஜ் வீதி] பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, மேஜர் முரளி பாலர் பாடசாலைக்கு அருகாமையில் (6572)

### தவறிவிட்டது

06-11-93 சனிக்கிழமை இரவு கிளாலி அக்கரையிலிருந்து யாழ்ப்பாணம் இக்கரைக்கு வரும்பொழுது உரப்பையால் மூடிக்கட்டப்பட்ட எனது உடுப்பு பாக் (Bag) ஒன்றும், கறுப்பு சிறு கை பாக் ஒன்றும் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் அல்லது ஈழநாதம் பத்திரிகைக் காரியாலயத்தில் கையளிக்கவும். கொடுப்பவருக்கு சன்மானம் வழங்கப்படும். செல்வி கா. சிவகௌரி, மே/பா திரு ச. கார்த்திகேசு மாதர்சங்கம் ஒழுங்கை, சித்தன்கேணி. (6577)

### பரபரப்பாக விற்பனையாம்

பிரட்மன் வீரக்கோன் எழுதத் தவறியது என்ன? என்ற தலையங்கத்துடன் ஆர் ஜே. பெரேரா என்பவரால் எழுதப்பட்ட புத்தகம் ஒன்று கொழும்பு நகரில் தற்போது பரபரப்பாக விற்பனையாகிறதாம் ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகராக இருந்த பிரட்மன் வீரக்கோன் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா பற்றி ஒரு நூல் ஒன்றை எழுதி வெளியிட்டு இருந்தது தெரிந்ததே.

### குமண பொருள்களை இறக்கியது

(வடமராட்சி)

ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தபோதிலும் பருத்தித்துறையில் 'குமண' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்று முன்தினமும் நடைபெற்றன.

'குமண' கப்பல் கப்டன் பொருள்களை இறக்குவதற்கு விசேட அனுமதி பெற்றுக் கொண்டதையடுத்து இக் கப்பல் காலை 9.30 மணிக்கு துறைமுகம் வந்து பொருள்கள் இறக்கும் வேலைகளும் இடம்பெற்றன. 'வாதுவ' கப்பல் காங்கேசன்துறை முகத்திலேயே தரித்து நிற்கிறது. (யோ)

### மாவீரர்தின ஏற்பாடு தீவிரம்

(வவுனியா)

வன்னி பகுதிகளில் மாவீரர் தின நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

வவுனியா, மணலாறு, கிளிநொச்சி, மன்னார் பகுதியெங்கும் மாவீரர் தினத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொது மக்கள் உற்சாகத்துடன் இதில் ஈடுபடுகின்றனர்.

### திருட்டு

(கிளிநொச்சி)

கொழும்பிலிருந்து வந்து யாழ்ப்பாணம் வருவதற்காக கிளிநொச்சி நகரில் தங்கியிருந்த ஆசிரியையிடம் கைச் சங்கிலி, மோதிரம் உட்பட ஐயாயிரம் ரூபாபணம் களவாடப்பட்டுள்ளது.

நவமணி லோகிதா என்ற இந்த ஆசிரியை கிளிநொச்சி கந்தசாமி கோவிலில் உள்ள பயணிகள் தங்குமிடத்தில் தங்கியிருந்த சமயம் இரவு வேளை மேற்படி நகையும் பணமும் திருடப்பட்டுள்ளன.

இதுபற்றி கிளிநொச்சி காவல்துறையிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை**

**பல்கலைக்கழக அனுமதிகள் 1993/94 கல்வி ஆண்டு**

1992 ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த (உயர் தர)ப் பரீட்சையில் விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த மாணவர்கள் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்து யாழ் பல்கலைக் கழக பரீட்சைகள் / அனுமதிகள் கிளையிலிருந்து முதற்படிவத்தை நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்.

1 பரீட்சைப் பெறுபேறும், மொத்தப்புள்ளியும்

2. தேசிய அடையாள அட்டை

3. ரூபா 50/- இற்கான பற்றுச்சீட்டு (வங்கியால் வழங்கப்பட்டது. (இளஞ்சிவப்பு, அல்லது யாழ். பல்கலைக்கழக நிதியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொண்டது].

கலை, வர்த்தக பிரிவுக்கு 17-11-1993 உம் கணித, விஞ்ஞான பிரிவுக்கு 18-11-1993 உம் விநியோகிக்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட முதற் படிவங்கள் 22-11 1993 ற்கு முன்பாக யாழ் பல்கலைக்கழக பரீட்சைக்கிளையில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

பதிவாளர்

(சி/7938)

---

## பல்கலைக்கழக அனுமதி படிவம் நாளை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவிடமிருந்து 93/94ஆம் கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிகள் சம்பந்தமான பத்திரங்களும், கைநூல்களும், யாழ் பல்கலைக்கழகத்தின் தேர்வுகளும், அனுமதிகளும் கிளைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன என்று யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது 92 ம் ஆண்டின் ஆகஸ்ட் மாத க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தகுதி பெற்ற மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை கலை வர்த்தக பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும், நாளை மறுதினம் வியாழக்கிழமை கணித விஞ்ஞான பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும் இந்த முதல் படிவங்கள் விநியோகிக்கப்படவுள்ளன இந்த முதல் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு 22-ம் திகதிக்கு முன்பாகஒப்படைக்கப்படவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது இப்படிவங்களைப் பெறுவதற்குத் தகுதியுடைய மாணவர்கள் தங்களது பரீட்சைப் பெறுபேறு, பெற்ற புள்ளிகள், தேசிய அடையாள அட்டை என்பவற்றைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஒரே முறையில் குறைந்தபட்சம் அங்கீகரிக்கப்பட்ட மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட நான்காவது பாடத்தில் 25 புள்ளிக்கு குறையாமல் பெற்றிருக்க வேண்டுமெனவும், மொத்தப் புள்ளிகள்180க்கு குறையாமல் பெற்றிருக்கும் மாணவர்கள் இப்பத்திரத்தைப் பெறத் தகுதியுடையவர்களாவர்.

பல்கலைக்கழகத்தில்அல்லது இணைந்த பல்கலைக்கழக கல்லூரியில், அல்லது உள்நாட்டு வைத்திய நுண்கலை நிறுவனங்களில் பதிவு செய்த மாணவர்கள் அல்லது அங்கு கற்கை நெறியொன்றைப் பின்பற்றும் மாணவர்கள், அல்லது மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் தேசிய தொழில் நுட் பவியல் டிப்புளோமா பயிற்சிநெறிக்கு பதிவு செய்த மாணவர்கள் அல்லது உயர்கல்வி அமைச்சு அலுவலகத்தின் மூலம் முதற் பட்ட மட்டத்திலான கற்கை நெறியினை பின்பற்றுவதற்காக வெளிநாட்டு புலமைப் பரிசு பெற்று வெளிநாடு செல்லும் மாணவர்கள் ஆகியோர் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க இடமளிக்கப்பட மாட்டார்கள். இது பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற பின் அனுமதியைத் தள்ளிப் போட்டுக் கொண்டவர்களுக்கும் பொருந்தும்.

மேலும் கட்டடச்சூழல் (கட்டடக்கலை) கற்கைநெறி அனுமதிக்குக் கருத்திற் கொள்ளப்பட விரும்பும் மாணவர்கள் மேலதிகமாக மொறட்டுவ பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் உளச்சார்பு பரீட்சைக்கு தோற்ற அப்பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க வேண்டுமெனவும், இவ் விண்ணப்பங்கள் அப்பல்கலைக்கழகத்தால் பிரத்தியேகமாக கோரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

ஓம்
பிரேமசாந்தி



அருள்மிகு

**சுவாமி பிரேமானந்தா**

அவர்களின்

## 42-வது ஜெயந்தி தினம் 17-11-1993

17-ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் விசேட அபிசேகம் நடைபெறும் அதைத்தொடர்ந்து ஸ்ரீ பிரேமானந்தா ஆசிரம வடபிரதேச ஒருங்கிணைப்பாளர் இல்லத்தில் பஜனை, பிரார்த்தனையும் சுவாமியின் பெயரில் பாடப்பெற்ற திரு ஊஞ்சல், பக்திப்பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா நிகழ்ச்சியும். நடைபெற இருக்கிறது.

அமைதி சாந்தி நிலவி, நாடு சுபீட்சம் பெற சுவாமியைப்பிரார்த்திப்போமாக.

ஜெய்பிரேமசாந்தி

தம்பிகுமார் வீதி. நடராசா
எரிபொருள் நிலைய அருகாமை பாக்கியலட்சுமி
சுன்னாகம். (6579)

---

## திருமண அழைப்பு

உ

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் கார்த்திகைத் திங்கள் 03-ம்நாள் (18 11 1993 வியாழக்கிழமை பகல் 12 மணி 20 நிமிடம் தொடக்கம் 01மணி 10 நிமிடம் வரையுமுள்ள கும்ப லக்கின சுபவேளையில்

| | |
|---|---|
| திருநிறைச் செல்வன் | திருநிறைச்செல்வி |
| **மனோகரன்** B. Sc. | **ராதாலஷ்மி** |
| (முல்லைத்தீவு மகாவித்தியாலயம்) | (வல்வெட்டித்துறை அ மி. த. க பாடசாலை) |
| அவர்கட்கும் | அவர்கட்கும் |

---

உங்கள் அதிர்ஷ்டத்தை இன்றே அறியுங்கள்

**யாழ் தொழில் நுட்பக் கல்லூரி**

மாணவர் அவை வளர்ச்சி நிதிக்காக

**அதிர்ஸ்ட லாபச்சீட்டு**

குலுக்கல் திகதி: **2-12-1993**

இடம்: தொழில் நுட்பக் கல்லூரி, கொக்குவில்

பரிசுகள்

1. துவிச்சக்கர வண்டி
2. நீரிறைக்கும் கைப்பம்பி
3. பெற்றோ மாக்ஸ்

மற்றும் பத்து ஆறுதல் பரிசுகள்

அன்பளிப்பு:

ரூபா 10/- மட்டும்

---

## நினைவு கூருகின்றோம்... 1993-11-16

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை-திருக்கோயில் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது சிறிலங்கா அதிரடிப்படையினரால் கைதாகி முகாமில் வைத்து அடித்துக்கொல்லப்பட்டு எமைப்பிரிந்த

**தவம்** (ஜெயரத்தினம் தவராஜா - திருக்கோயில்-அம்பாறை)

**குரு** (சின்னத்தம்பி பத்மநாதன் - கரடித்தோட்டம்-காரைதீவு 03 - அம்பாறை)

1987ஆம் ஆண்டு உரும்பராய் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

**அன்சார்** செல்லையா கணேசலிங்கம் - செல்வபுரம்-

ஜனாதிபதியின் சர்வதேச ... விவகாரங்களுக்கான ஆலோச கராக இருந்த பிரட்மன் வீரக் கோன் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா பற்றி ஒரு நூல் ஒன்றை எழுதி வெளியிட்டு இருந்தது தெரிந்ததே.

... வேளை மேற்படி நகையும் பணமும் திருடப்பட்டுள்ளன.

இதுபற்றி கிளிநொச்சி காவல்துறையிடம் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படைக்கப்பட வேண்டும்.

பதிவாளர்

(சி/7938)

சுன்னாகம். (6579)

---

உ

# திருமண அழைப்பு

அன்புடையீர்

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் கார்த்திகைத் திங்கள் 03-ம்நாள் (18 11 1993 வியாழக்கிழமை பகல் 12 மணி 20 நிமிடம் தொடக்கம் 01மணி 10 நிமிடம் வரையுமுள்ள கும்ப லக்கின சுபவேளையில்

திருநிறைச் செல்வன்

**மனோகரன்** B. Sc.

(முல்லைத்தீவு மகாவித்தியாலயம்)

அவர்கட்கும்

திருநிறைச்செல்வி

**ராதாலஷ்மி**

(வல்வெட்டித்துறை அ மி. த. க பாடசாலை)

அவர்கட்கும்

மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யம் செய்து வைக்க பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி அருணாசலம்
வேம்படி.
வல்வெட்டித்துறை.

திரு. திருமதி சிவகணேசமூர்த்தி
சில்லாலை,
வல்வெட்டித்துறை

★ இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுங்கள்


(6563)

---

**1-ம் ஆண்டு** **4-ம் ஆண்டு**

# நினைவஞ்சலி





| சூரர் மாம்பழம் | | சின்னப்பொடி சூரர் |
|---|---|---|
| 29-03-1924 | <பிறப்பு> | 28-10-1922 |
| 28-10-1992 | <இறப்பு> | 09-11-1989 |
| 16-11-1993 | <திதி:> | 24-11-1993 |

பாசம் மிகு அம்மாவே அப்பாவே பிள்ளைகளை வளர்த்து நல்வழிப்படுத்த உமக்கு ஈடாய் யாருண்டு? விதியின் விளையாட்டோ அம்மாவோடு அப்பாவையும் சேர்த்தழைத்துவிட்டதே. உங்கள் ஆத்மசாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்,

உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கன்பொல்லை வீதி,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

(6587)

---

உங்கள் அதிர்ஷ்டத்தை இன்றே அறியுங்கள்

# யாழ் தொழில் நுட்பக் கல்லூரி

மாணவர் அவை வளர்ச்சி நிதிக்காக

## அதிர்ஸ்ட லாபச்சீட்டு

குலுக்கல் திகதி: **2-12-1993**

**இடம்: தொழில் நுட்பக் கல்லூரி, கொக்குவில்**

பரிசுகள்

1. துவிச்சக்கர வண்டி
2. நீரிறைக்கும் கைப்பம்பி
3. பெற்றோ மாக்ஸ்

மற்றும் பத்து ஆறுதல் பரிசுகள்

அன்பளிப்பு;

ரூபா 10/- மட்டும்

குறிப்பு; ரிக்கற் புத்தக அன்பளிப்பு;-

எரிக் கணேஷ்

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7939)

---

# கண்ணீர் அஞ்சலி

மாவீரன்

## ஈழமாறன் [தினேஸ்]

[சுப்பிரமணியம் இந்திரகுமார்]

(தெல்லிப்பழை மகாஜனாகல்லூரி உயர்தர வகுப்புமாணவன்)
விபுலானந்தர் வீதி, மாதகல்

பூநகரி முகாம் தகர்ப்பில் வீரகாவியம் படைத்த வீரவேங்கை ஈழமாறன் [தினேஷ்] அவர்களுக்கும் அவரோடு வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்.

தற்போதைய முகவரி
பெரிய அரசடி,
(இந்துக்கல்லூரி அருகாமையில்)
சங்கத்தானை,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
உறவினர்கள்.

(6586)

---

# கண்ணீர் அஞ்சலி

## ஆசிரியர் அ. ஜீவகுணரட்ணம்

கோப்பாய் தொலைக்கல்விப் பயிற்சி நிலையம்
2-ம் ஆண்டு ஆசிரியர்

14-11-93 அன்று இரவு அகால மரணமானார்

பயிற்சிப் பரீட்சையிலே பாடினோம் ஆடினோம்
பகல் ஒன்று கழியவில்லை பறந்தனையோ
வெண்புறாவே
நம்ப முடியவில்லை நான் - மலரே உன் உதிர்வு
தெம்பு எமக்களிக்கத் தேசமதில் யாருளரோ.

தகவல்

கோப்பாய் வடக்கு.

போதனாசிரியர்கள்,
சக ஆசிரியர்கள்.

(6585)

---

# நினைவு கூருகின்றோம்...
# 1993-11-16

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் அம்பாறை - திருக்கோயில் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த போது சிறிலங்கா அதிரடிப்படையினரால் கைதாகி முகாமில் வைத்து அடித்துக் கொல்லப்பட்டு எமைப்பிரிந்த

**தவம்** (ஜெயரத்தினம் தவராஜா - திருக்கோயில்- அம்பாறை)

**குரு** (சின்னத்தம்பி பத்மநாதன் - கரடித்தோட்டம்- காரைதீவு 03 - அம்பாறை)

1987ஆம் ஆண்டு உரும்பராய் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய-

**அன்சார்** செல்லையா கணேசலிங்கம் - செல்வபுரம்- உரும்பராய் தெற்கு - யாழ்)

அக்கரைப்பற்று - கோளாவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**கோபு** (சண்முகம் இளங்கோ- வீரமுனை - சம்மாந்துறை)

கோப்பாய் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர்-

**சண்முகம் இரங்கநாதன் மாஸ்ரர்** (கோப்பாய்)

1988ஆம் ஆண்டு சாவகச்சேரி - சங்கத்தானைப் பகுதியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான-

**நாகூர்ச்செல்வம் குணாளன்**

இந்தியப்படையினரால் முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்ட கரவெட்டி சாமியன் அரசடியைச் சேர்ந்த இருதயக்கல்லூரி மாணவன்.

1990ஆம் ஆண்டு வசாவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**ஈழம்** (மகாலிங்கம் சுகந்தன் - ஏழாலை மத்தி - யாழ்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு - ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1991ஆம் ஆண்டு அம்பாறை கோளாவில் பகுதியில் வீரச்சாவெய்திய-

**சந்திரன்** [ — கோணேஸ்வரன்- கோளாவில்-அம்பாறை]

மட்டு - மாவடி முன்மாரிப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழர்.

1992ஆம் ஆண்டு இளவாலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய-

**2ம் லெப். தம்பி/சிவானு** (ஐயாத்துரை தருமலிங்கம் - கிளாலி, எழுதுமட்டுவாள்)

மணலாறு, சிலோன் தியேட்டர் காவலரண் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**அண்ணாத்துரை** (சரவணமுத்து காந்தரூபன் - 6-ம்வட்டாரம், முள்ளியவளை – முல்லைத்தீவு)

**லெப். கரிகாலன்** (ஆறுமுகம் சாந்தகுமார் - சேமமடு - வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/79 37)

நல்லூர் கிளை நூலகம்.

**சிந்தனைக்கு**

ஆணவத்தின் கொம்புகள், ஆற்றல் மிக்க தச்சரின் ரம்பத்தால் சீவப்பட்டு விடும்.

- திபெத் நாட்டுப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 16-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2023
த. பெ. எண் - 05

## விரும்பாமல் இல்லை

சிங்கள எதிர்க்கட்சியினரும், பேரினவாதப் பத்திரிகைகளும் சிறிலங்கா அரசு மீது பாய்ந்து விழுந்துள்ளன. பூநகரி முகாமில் இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்விக்கு அரசாங்கமே பொறுப்பு என அவை குற்றம் சாட்டியுள்ளன. ஒவ்வொரு முறையும போரில் தோல்விகளைச் சந்திக்கும்போது இவ்வாறு எதிர்க்கட்சிகளும், பேரினவாதப் பத்திரிகைகளும் அரசு மீது பாய்ந்தாலும் இம்முறை அது ஆவேசமான பாய்ச்சலாகவுள்ளது.

''விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்காக இராணுவத்தை சரியான வழியில் வழிநடத்திச் செல்லும் அரசியல் தலைமை தேவை'' என 'சண்டே ரைம்ஸ்' அரசை சாடியுள்ளது.

''நாடு பிளவுபடக் கூடாது என்பதை அரசு உண்மையிலேயே விரும்பின் கட்டாய இராணுவச் சேவையை அரசு உடனடியாக அமுல்படுத்த வேண்டும்.'' இவ்வாறு 'ஐலண்ட்' பத்திரிகை வற்புறுத்தியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவோ, இன்னும் ஒருபடி மேலேபோய், ''பாதுகாப்பிற்கென ஒருஅமைச்சர் இல்லாமையே தற்போதைய நிலைக்குக் காரணம்'' எனக் குற்றம் சாட்டியுள்ளதோடு, ''போரிடும் உறுதியை அரசு இந்த நேரத்தில் அதிகரித்துக் கொள்ள வேண்டும்'' எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்வாறான இந்நிலைப்பாடானது, யுத்தத்தில் தனியாக ஐ. தே. கட்சி அரசியல்வாதிகள் மட்டுமே ஈடுபடுவது போன்றதொரு தன்மையையேவெளிக்காட்டுகின்றது. ஆனால் யுத்தம் தனியாக ஐ தே க அரசியல்வாதிகளுடன் மட்டுமல்ல சிறிலங்கா இராணுவத்தினருடனும், விடுதலைப் புலிகளுடனும். தமிழ் மக்களுடனும், அவர்களின் விடுதலை உணர்வுடனும் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது

இதேவேளை நல்லதொரு அரசியல் சூழ்நிலை நிலவுமானால் பூநகரியில் ஏற்பட்ட பாரிய தோல்விக்கு தார்மீகப் பொறுப்பேற்று சிறிலங்கா இராணுவத் தளபதியும் ஜனாதிபதியும் தாமாகவே பதவி விலகியிருக்க வேண்டும் ஆனால் அவர்களும் அவ்வாறு செய்யவில்லை

எதிர்க்கட்சிகள் கூறுவதுபோல் ஐ. தே. க அரசாங்கத்திடம் பாதுகாப்பு அமைச்சர் இல்லை என்பது உண்மைதான். ஆனால், போருக்கான ஏற்பாட்டிலும், தமிழருக்கு எதிரான நடவடிக்கையிலும் ஐ. தே. க. எந்தவகையில் பின்னிற்கிறது? நாட்டின் பெரும் வளங்களைப் போருக்கெனத் திருப்பி விட்டுள்ளது? போதிய சட்டபூர்வ ... ஆயுதப் படைக்கு வழங்கியுள்ளது.

# முழுப்பலத்தையும் திரட்டி சிங்களவர் போராட வேண்டும்

## 'திவயின' அறைகூவல்

(கொழும்பு)

எமது முழுப் பலத்தையும் ஒன்று திரட்டி விடுதலைப் புலிகளுக்கு எதிராக சண்டையில் ஈடுபடுவதன் மூலமே இந்த யுத்தத்தில் நாம் வெற்றி அடைய முடியும் என்று திவயின பத்திரிகை அதன் ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிடுகையில், இன்று நாம் கவனயீனமாக இருந்தால் எமது உரிமை பறிக்கப்பட்டுவிடும். எனவே சிங்கள இனம் தமது முழுச் சக்தியையும் திரட்டி விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடுவதன் மூலம் மட்டுமே தொடர்ந்து எமது உரிமைகளை நாம் பாதுகாக்க முடியும்.

சில வேளைகளில் அரசியல்வாதிகள் சிந்திக்காது எமது உரிமைகளை இழந்து விடுவதற்கும் செயல்படக்கூடும். அத்தகைய நேரத்தில்பௌத்த பீடங்களும், புத்தி ஜீவிகளும், இதனைத் திறம்பட தடுத்து நிறுத்த உதவ வேண்டும். இந்தக் காலகட்டத்தில் சீவியம் நடத்தும் ஒவ்வொரு சிங்கள மகனும் தனது இனத்தின் எதிர்கால உரிமைகளையும், சுதந்திரத்தையும் பற்றி ஆராய உரிமை படைத்தவர்கள் என்பதை மறந்துவிடக்கூடாது

இன்று சிங்கள மக்கள் தமது கண்களை மூடினால் நாளை சிங்கள மக்கள் அடிமை இரத்தம் சிந்தி அடிமைகளாக நாடு முழுவதும் சீவிக்க வேண்டி வரும் எனவும் தெரிவித்துள்ளது.

## அரசின் சித்திரவதை தொடர்வது ஒளிவு மறைவின்றி தெரிகிறது

**- மனித உரிமை அமைப்பின் தலைவர்**

(கொழும்பு)

அரசாங்கம் தொடர்ந்து சித்திரவதைகளை மேற்கொள்வது ஒழிவுமறைவு இன்றித் தெரிய வருகின்றது. இதனைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. இவ்வாறு மனித உரிமைகள் நலன் காக்கும் அமைப்பின் தலைவர் ஜே. எஸ். ஓ சூசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், மனித உரிமைகள் குழுக்களின் கடமை தடுத்து வைக்கப்பட்டிருப்பவர் பற்றிய தகவல்களைத் திரட்டுவது மட்டுமல்ல அவர்களின் நலன்களையும், உரிமைகளையும் பாதுகாப்பதும் ஆகும் எது எப்படி இருந்தபோதும் 1991ஆம் ஆண்டுக்கு முன்னர் காணாமற் போனவர்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

1991 ஜனவரி 11ஆம் திகதிக்கு பின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பாக ஆராய புதியதொரு சமிஷன் அமைக்கப்பட்டுள்ளது ஆனால் இதற்கும் முன்னர் காணாமற் போனவர்கள் தொடர்பாக விபரங்களைத் திரட்டுமாறு நாம் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

எமக்குக் கொடுக்கப்பட்ட சட்டதிட்டத்தின்படி கைது செய்யப்பட்டு தடுத்து வைத்திருப்பவர்களைப் பார்த்து அவர்கள் நலன்களை மட்டுமே பேண முடியும் எனவேதான் காணாமற் போனவர்கள் அதற்கு முன்பாகக் கைது செய்யப்படும்போது அவர்கள் நலனைக் கவனிக்க அதிகாரம் தரப்பட வேண்டும் எனக் கோருகின்றேன் என்றும் தெரிவித்தார்.

## காணாமல் போவோர் தொகை தெற்கில் அதிகரிப்பு

(கொழும்பு)

காணாமல் போனவர்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் அன்று தென்னிலங்கை சிங்கள மக்கள் காணாமல் போனார்கள் ஆனால். இன்று வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தொடர்ந்து காணாமல் போகின்றார்கள் எனவே நாம் இது குறித்து மிகஅவதானமாக இருக்க வேண்டுமெனவும் காணாமல் போனவர்களின் பெற்றோர் சங்கத்தின் தலைவர் விஜயதாசா பத்திரன தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 16, 17, 18-ம் திகதிகளில் காணாமல் போனவர்களின் தொடர்பாக கண்காட்சி கொழும்பு புத்தக சாலை மண்டபத்தில் நடைபெறுதல் தொடர்பாக சந்தேசியவுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத்தெரிவித்தார்

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; சென்றகாலங்களில் காணாமல் போனவர்கள் சட்ட பூர்வமான சட்ட பூர்வமற்ற ஆயுதக் குழுக்கள் செய்த கொலைகள் தொடர்பான பல தகவல்கள் இக்கண்காட்சியில் வெளிப்படுத்தப் போவதாக தெரிவித்தார்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; அன்றைய காலங்களில் இரவு நேரங்களில் இராணுவ சீருடையிலும் சிவிலுடையிலும் இராணுவமும் ஏனைய குழுக்களும் பிள்ளைகளை கடத்திச் சென்றுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மாவீரர்களின் புகழுடல்களுக்கு மக்கள் பெருமளவில் அஞ்சலி

(வடமராட்சி)

... செலுத்தினர்.

## அரச எழுதுவினைஞர் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நவம்பர் 20-ல்

அரசாங்க, மாகாண அரசாங்க சேவையிலுள்ள பொது எழுதுநர் சேவையின் 11ஆம் வகுப்பின் அ பிரிவிற்கு நியமிப்பதற்கான பரீட்சை 20-11-1993 காலை 9 00 மணிக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். இதற்கான அனுமதி அட்டைகளை யாழ். கல்வித் திணைக்களத்தில் 15-11-93 முதல் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கணக்காய்வுப் பரீட்சகர் சேவை தரம் 11க்கு நியமனம் செய்வதற்கான மட்டுப்படுத்தப்படாத (திறந்த) போட்டிப்பரீட்சை 26-11-93, 27-11 93, 04-12 93 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடைபெறும். இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும்

அரசாங்க, மாகாண அரசாங்க தட்டெழுத்தாளர் சேவையில் வகுப்பு 2, பிரிவு அ வின் உத்தியோகத்தர்களை வகுப்பு 1க்கு பதவி உயர்த்துவதற்கான பொதுத் தகவுப் பரீட்சை 27-11-93ஆம் திகதி கொழும்பில் நடைபெறும். இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும்

மேற்படி இரு பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் பரீட்சை ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம்' கொழும்பு என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## பயணிகள் கவனத்திற்கு

மேர்க்கஸ் ரூமண கப்பல் மூலம் பருத்தித்துறையிலிருந்து திருக்கோணமலை வரை செல்வதற்காக விண்ணப்பித்துள்ள அனைவரும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30க்கும் 12.00 மணிக்கும் இடையில் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் யாழ்ப்பாணம் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பயணத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அன்றைய தினமே பயணச்சீட்டுக்களில் கையொப்பமிட்டு தமது பயணத்தை உறுதிப்படுத்த வேண்டும் எனவும், மேற்படி தினத்தில் பணிமனைக்கு சமுகமளிக்காதவர்கள் தமது விண்ணப்பத்தை மீளப் பெற்றவர்களாகவே கருதப்படுவர் எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் முதன்மைப் பிரதிநிதியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அநுராவைத் தடுக்க சிறிமாவோ முயற்சித்தார்

**- சந்திரிகா குமாரணதுங்கா**

(கொழும்பு)

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தாயார் என்ற நிலையில் அல்லாமல் கட்சியின் தலைவர் என்ற நிலையிலேயே அநுராவின் விடயத்தில் முடிவு எடுத்தார். அநுராவின் வெளியேற்றத்தை தடுப்பதற்காக அவர் முயற்சி எடுத்தார். அது முடியாமற் போனபோது கடுமையாக நடக்க வேண்டி ஏற்பட்டது. எனினும் அநுரா தனது இராஜினாமாக் கடிதத்தை கொடுத்த நாள் முதல் ஐந்து தினங்கள் வரை நான் திருமதி சிறிமாவோவை சந்திக்கவேயில்லை. அவர் எந்த செல்வாக்கிற்கும் உட்படாமல் தாமாக முடிவு எடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே நான் இவ்விதம் நடந்தேன்.

பூசல் பற்றிக் குறிப்பிடுவதானால் அது அவருக்கு எதிராகவே போய்ச் சேரும். அநுராவினாலேயே நான் கட்சியிலிருந்து வெளியேறினேன் என்பது தான் அண்மைய வரலாறு அநுரா தனது நிலையை உறுதிப்படுத்துவதற்காக மைத்திரிபாலவுடன் இணைந்து ஒரு குழுவைத் தோற்றுவித்து கட்சித் தலைமைப் பீடத்தை உதாசீனப்படுத்தி நடந்தமையினாலேயே நான் டிசம்பர் 1983இல் கட்சியை விட்டு வெளியேற நேர்ந்தது. கட்சியின் ஐக்கியத்தை காப்பதற்காகவே நான் அப்போது வெளியேறினேன். அநுராவைப் போலன்றி நான் கட்சியில் தொடர்ந்தும் இருந்திருந்தால் கட்சித் தலைமைக்கு ...

ஆனால் அவரால் எதையும் சாதிக்க முடியவில்லை. கடுமையாக உழைப்பதை விடவும் அடிக்கடி வெளிநாடுகளுக்கு பயணமாவதிலேயே அவர் நாட்டம் காட்டினார்.

கேள்வி: ஆக அநுரா கட்சியிலிருந்து வெளியேறியது அவரது திறமைக் குறைவினாலேயே அன்றி உங்களால் ஏற்பட்ட போட்டியினா அல்லல் என்கிறீர்களா?

பதில்: இது எனது ஆய்வு அவரதுதகுதியீனம்கட்சிக்குள் அவரது செல்வாக்கில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. அவர் கடுமையாக உழைக்கப் பின்நின்றார். அவர் எப்போதும் சுலபமான வசதியான வாழ்வையே விரும்பி நாடினார். 1977-ல் எமது கட்சி தோல்வி ...

விடுத்துள்ளார்.

இவ்வாறான இந்நிலைப்பாடானது, யுத்தத்தில் தனியாக ஐ. தே. கட்சி அரசியல்வாதிகள் மட்டுமே ஈடுபடுவது போன்றதொரு தன்மையையேவெளிக்காட்டுகின்றது. ஆனால் யுத்தம் தனியாக ஐ தே க அரசியல்வாதிகளுடன் மட்டுமல்ல சிறிலங்கா இராணுவத்தினருடனும், விடுதலைப் புலிகளுடனும். தமிழ் மக்களுடனும், அவர்களின் விடுதலை உணர்வுடனும் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது

இதேவேளை நல்லதொரு அரசியல் சூழ்நிலை நிலவுமானால் பூநகரியில் ஏற்பட்ட பாரிய தோல்விக்கு தார்மீகப் பொறுப்பேற்று சிறிலங்கா இராணுவத் தளபதியும் ஜனாதிபதியும் தாமாகவே பதவி விலகியிருக்க வேண்டும் ஆனால் அவர்களும் அவ்வாறு செய்ய வில்லை

எதிர்க்கட்சிகள் கூறுவதுபோல் ஐ. தே. க அரசாங்கத்திடம் பாதுகாப்பு அமைச்சர் இல்லை என்பது உண்மைதான். ஆனால், போருக்கான ஏற்பாட்டிலும், தமிழருக்கு எதிரான நடவடிக்கையிலும் ஐ. தே. க. எந்தவகையில் பின்னிற்கிறது? நாட்டின் பெரும் வளங்களைப் போருக்கெனத் திருப்பி விட்டுள்ளது? போதிய சட்டபூர்வ அங்கீகாரத்தையும் ஆயுதப் படைக்கு வழங்கியுள்ளது. அத்தோடு, இனப்பிரச்சினையே இல்லை உள்ளதெல்லாம் 'பயங்கரவாதப் பிரச்சினையே' எனவும் அறிவித்து படுகொலைகளுக்கான நேரடி அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது. இதைத் தவிர அரசாங்கத்தால் என்ன செய்ய முடியும்?

இதேவேளை, அரசாங்கத்தின் உத்தரவுகளைப் பெற்ற தளபதிகளும், ஆயுதப் படையும் தம்மால் ஆன முழுமுயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றார்கள். புலிகளுக்கு எதிரானபோர்எனக் கூறிக்கொண்டு ஆஸ்பத்திரிகள் கோவில்கள்குடியிருப்புக்கள்அரசசெயலகங்கள்என்பனவற்றையும்தாக்கி வருகின்றனர். அரசாங்கம் வழங்கிய அதிகாரத்தையும், வளத்தையும் தம்மால் இயன்றவரை அவர்களும் பயன்படுத்தியும், பிரயோகித்தும் வருகின்றனர்.

ஆனால், போரில் வெற்றி பெறுவது இலகுவான காரியமாக இல்லை. இந்நிலையில், அமைச்சர் இல்லை எனக் குறை கூறுவதோ, அன்றி அரசியற் தலைமை சரியில்லை எனக் குறை கூறுவதில் பயன் ஏதுமில்லை. அந்தவகையில். குறை கூறுவதானால், ஆயுதப்படைகளின் குறிப்பாக இராணுவத் தளபதியையும் சேர்த்தே குறை கூறப்பட வேண்டும். ஆனால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் மீது மட்டும் குற்றம் சாட்டுவது அவர்களின் அரசியல் குரோதத்தின் வெளிப்பாட்டையே காட்டுகின்றது.

இதேவேளை, தமிழரின் ஆயுதப் போராட்டம் ஒரு தேசிய விடுதலைப் போராட்டம். தேசிய இனப்பிரச்சினை ஒன்றிற்கு இராணுவத் தீர்வு காண்பதென்பது சாத்தியமான தொன்றல்ல என்பது பொதுவாகவே உலகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டதொன்று. அத்தோடு விடுதலைப் புலிகள் இயக்கம் துணிவிற்கும், அர்ப்பணிப்பிற்கும், போராடும் ஆற்றலிலும் உலகப்புகழ் பெற்றுவிட்ட ஒரு போராளி அமைப்பு. இந்நிலையில், போரில் வெற்றி என்பது தனியாக சிறிலங்கா அரசாங்கத்தினதும் இராணுவத்தினதும் கையில் மட்டுமல்ல. விடுதலைப் புலிகளிலும், தமிழ்மக்களிலும் தங்கியுள்ளது இந்த யதார்த்தத்தை சிங்கள எதிர்க்கட்சியினரும், பத்திரிகைகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது, ஐ. தே. க. அரசாங்கமும், சிங்கள இராணுவமும் போரில் வெல்லத்தான் முயல்கின்றன. ஆனால் விடுதலைப் புலிகளும், தமிழ்மக்களும் அவர்களை தோற்கடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்நிலையில் அரசை மட்டும் குறை கூறிப் பயனென்ன? அவர்கள் என்ன யுத்தத்தில் வெற்றி பெற விருப்பமில்லாமலா உள்ளனர்?

---

ரித்து வருவதாகவும் அன்று தென்னிலங்கை சிங்கள மக்கள் காணாமல் போனார்கள் ஆனால், இன்று வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தொடர்ந்து காணாமல் போகின்றார்கள் எனவே நாம் இது குறித்து மிகஅவதானமாக இருக்க வேண்டுமெனவும் காணாமல் போனவர்களின் பெற்றோர் சங்கத்தின் தலைவர் விஜய தாசா பத்திரன தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 16, 17, 18-ம் திகதிகளில் காணாமல் போனவர்களின் தொடர்பாக கண்காட்சி கொழும்பு புத்தக சாலை மண்டபத்தில் நடை

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; சென்றகாலங்களில் காணாமல் போனவர்கள் சட்டபூர்வமான சட்ட பூர்வமற்ற ஆயுதக் குழுக்கள் செய்த கொலைகள் தொடர்பான பல தகவல்கள் இக்கண்காட்சியில் வெளிப்படுத்தப் போவதாக தெரிவித்தார்

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; அன்றைய காலங்களில் இரவு நேரங்களில் இராணுவ சீருடையிலும் சிவிலுடையிலும் . இராணுவமும் ஏனைய குழுக்களும் பிள்ளைகளை கடத்திச் சென்றுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மாவீரர்களின் புகழுடல்களுக்கு மக்கள் பெருமளவில் அஞ்சலி

(வடமராட்சி)

பூநகரி சிறிலங்கா இராணுவ முகாம், நாகதேவன் கடற்படைத்துறை முகாம்களை தாக்கி அழித்த மாவீரர்களில் 19 மாவீரர்களின் புகழுடல்கள் ஞாயிறுமாலை 5.00 மணியளவில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

சரித்திர வரலாறு படைத்த இம்மாவீரர்களின் இறுதி அஞ்சலியின் போது நூற்றுக்கணக்கான மக்கள் சோகம் தீராத நிலையில் நிரையாக நின்று மலர், மலர்மாலைகள் இட்டு தமது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

விடுதலைப்புலிகளின் பாண்ட் வாத்திய அணி வகுப்பு மரியாதைகளுடன் மாவீரர்களின் புகழுடல்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. வீதி எங்கும் மக்கள் பூரண கும்பம் வைத்து இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

இவர்களது வித்துடல்கள் வடமராட்சிக் கோட்டத்தில் நவிண்டில் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விதைக்கப்பட்டது. விடுதலைப்புலிகளின் நினைவுரைகளும் இடம்பெற்றன.

(யோ)

---

- சந்திரிகா குமாரணதுங்கா

(கொழும்பு)

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தாயார் என்ற நிலையில் அல்லாமல் கட்சியின் தலைவர் என்ற நிலையிலேயே அநுராவின் விடயத்தில் முடிவு எடுத்தார். அநுராவின் வெளியேற்றத்தை தடுப்பதற்காக அவர் முயற்சி எடுத்தார். அது முடியாமற் போனபோது கடுமையாக நடக்க வேண்டி ஏற்பட்டது. எனினும் அநுரா தனது இராஜினாமாக் கடிதத்தை கொடுத்த நாள் முதல் ஐந்து தினங்கள் வரை நான் திருமதி சிறிமாவோவை சந்திக்கவேயில்லை. அவர் எந்த செல்வாக்கிற்கும் உட்படாமல் தாமாக முடிவு எடுக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே நான் இவ்விதம் நடந்தேன். இல்லாவிட்டால் தினமும் நான் திருமதி சிறிமாவை சந்தித்து அவரது சுகநலன் பற்றி விசாரிப்பது உண்டு. இவ்வாறு மேல்மாகண முதல்வரும் சிறிமாவோவின் புதல்வியுமான திருமதி சந்திரிகா குமாரணதுங்க கூறியுள்ளார்.

சண்டே ஐலண்ட் வார இதழுக்கு பேட்டி அளித்த அவர் அநுரா எப்படியும் வெளியேற்றப்படுவார் என்ற நம்பிக்கையில் நீங்கள் காத்திருந்தீர்களா என்ற நிருபரின் கேள்விக்கும் பதிலளித்தார். இல்லை. அவ்வாறு கூற முடியாது. அநுரா உட்கட்சிப் பூசல் பற்றிக் குறிப்பிடுவதானால் அது அவருக்கு எதிராகவே போய்ச் சேரும். அநுராவினாலேயே நான் கட்சியிலிருந்து வெளியேறினேன் என்பது தான் அண்மைய வரலாறு அநுரா தனது நிலையை உறுதிப்படுத்துவதற்காக மைத்திரிபாலவுடன் இணைந்து ஒரு குழுவைத் தோற்றுவித்து கட்சித் தலைமைப்பீடத்தை உதாசீனப்படுத்தி நடந்தமையினாலேயே நான் டிசம்பர் 1983இல் கட்சியை விட்டு வெளியேற நேர்ந்தது. கட்சியின் ஐக்கியத்தை காப்பதற்காகவே நான் அப்போது வெளியேறினேன். அநுராவைப் போலன்றி நான் கட்சியில் தொடர்ந்தும் இருந்திருந்தால் கட்சித் தலைமைக்கு கட்டுப்பட்டு கட்சியின் ஒழுங்கைக் காப்பாற்றியிருப்பேன். அதனால் தான் தாயாரைவிட மேலாக கட்சித் தலைமையை கைப்பற்ற முனைந்த அநுராவுடன் போட்டியிடுவதிலிருந்து விலகி வெளியேறினேன். நவம்பர் 1991இல் நான் மீண்டும் கட்சிக்கு திரும்பி வரும் வரையிலான எட்டு ஆண்டுகளிலும் நான் இல்லாத போதிலும் கூட அநுரா கட்சித் தலைமைக்காக தாயாருடன் போட்டியிட்டே வந்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவராகுவதற்கு அவர் எடுத்த முயற்சி இதற்கு ஒரு சான்று.

கட்சியில் இல்லாத போதும் கூட அநுரா தலைமைப் பதவிக்குரிய தமது தகுதிப்பாட்டை நிரூபிக்கவில்லை என்றா கூறுகின்றீர்கள்?

பதில்; அவர் எப்போதுதான் தமது திறமையை நிரூபித்தார்? வெளிநாட்டில் தனது படிப்புகளை முடித்துக் கொண்டு கட்சியில் சேர்ந்த ஆரம்பத்திலேயே தனக்கு ஒரு பதவி தரப்பட வேண்டுமெனக்கேட்டு இளைஞர் அணி அமைப்பாளர் பதவியைப் பெற்றுக்கொண்டார். அந்த வேளையில் கட்சிக்குள் எனக்கு இருந்த சக்தியை பயன்படுத்தி அவருக்கு உதவினேன். தனக்கு இருந்த பதவிகளைப் பயன்படுத்தி அவர் என்ன செய்தார்? பின்னாளில் கட்சித் தலைமை தன்னிடம் தரப்பட வேண்டும் என்று அவர் தாயாரை வலியுறுத்தினார். என் தொடர்பாக அநுராவிற்கு இருந்த அச்சங்களைப் போக்க என்னால் ஆன அனைத்தையும் செய்தேன். அநுராவிற்காக தாயாரிடமும் பரிந்து பேசினேன். ஆனால் தாயார், அநுரா தனது திறமையை முதலில் நிரூபிக்க வேண்டும் என்றே வலியுறுத்தி வந்தார். அப்போது தேசிய மட்டத்தில் கட்சியை புனரமைப்பு செய்யவும் அவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஆனால் அவரால் எதையும் சாதிக்க முடியவில்லை. கடுமையாக உழைப்பதை விடவும் அடிக்கடி வெளிநாடுகளுக்கு பயணமாவதிலேயே அவர் நாட்டம் காட்டினார்.

கேள்வி: ஆக அநுரா கட்சியிலிருந்து வெளியேறியது அவரது திறமைக் குறைவினாலேயே அன்றி உங்களால் ஏற்பட்ட போட்டியினா அல்லல் என்கிறீர்களா?

பதில்: இது எனது ஆய்வு அவரதுதகுதியீனம்கட்சிக்குள் அவரது செல்வாக்கில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. அவர் கடுமையாக உழைக்கப் பின் நின்றார். அவர் எப்போதும் சுலபமான வசதியான வாழ்வையே விரும்பி நாடினார். 1977-ல் எமது கட்சி தோல்வி அடைந்தபோதே அவர் ஐ.தே. க. வில் இணைவதற்கு ஆர்வம் காட்டினார். அதிகாரம் இல்லாமல் இருப்பதை அவர் விரும்பவில்லை. 1977ன் தேர்தல்கள் முடிந்த இரண்டு நாட்களின் பின்னர் மைத்திரிபால மூலம் ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஐ தே. கவுடன் இணையுமாறு எமது தாயாருக்கு அழைப்பு விடுத்தார். தாயார் அந்த அழைப்பை நிராகரித்த போது அநுரா மைத்திரிபாலவிற்கு ஆதரவாகப்பேசினார் கட்சியின் ஆதரவாளர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்க இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தலாம் என்று அநுரா கருத்து தெரிவித்தார். ஆனால் நான் தாயாரின் நிலைப்பாட்டையே ஆதரித்தேன் எனினும் பின்னர் கட்சியின் முக்கிய தலைவர்களான ரி.பி. இலங்கரத்தினா, கொப்பேகடுவ, பிரேமதாசா உடுகம போன்றோரை வெளியேற்றுவதில் அநுரா ஈடுபட்டார்.

கேள்வி: அநுராவின் வெளியேற்றத்தை தொடர்ந்து சுதந்திரக்கட்சி உங்கள் தலைமையில்இடதுசாரிகளின் செல்வாக்கிற்கு உட்படும் என்றும் நாட்டின் சமூக பொருளாதாரக் கொள்கைகளில் பெரும் தாக்கத்தை இது ஏற்படுத்தலாம் என்றும் கருதப்படுகிறதே.

பதில்: நான் மேல் மாகாண முதல்வராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து வர்த்தக சமூகம் பெரிதும் கவலைப்பட்டதாகவும், நான் சோசலிச பொருளாதார கொள்கையை கடைப்பிடிக்கலாம் என்று கருதியதாகவும் அறிந்தேன் இந்நிலையில எனது பொருளாதார அரசியல் கொள்கைகள் தொடர்பாக விளக்கமளிக்க ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துகிறேன் இன்னும் சொல்லப் போனால் சுயதொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் எனது திட்டத்திற்கு நான் தனியார் கம்பெனிகளையே நம்பியிருக்கிறேன்.

---

## ஆந்திராவில் நிலக்கண்ணி வெடி பொலிஸ் அதிபர் உட்பட 10பேர்பலி

(ஹைதராபாத்)

ஆந்திரா பிரதேச மாநிலத்தின் மேஹபூர்நாம் மாவட்டத்திலுள்ள சோமசிலா கிராமத்தில் நேற்று முன்தினம் மக்கள் போராட்டக் குழுவினர் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் பொலிஸ் சுப்ரிண்டன்ட் ஒருவர் உட்பட மற்றும் பத்துப்பேர் கொல்லப்பட்டனர்.

பொலிஸ் சுப்ரிண்டன்ட் பரதேசி நாயுடுவும் ஏனைய பொலிசாரும் கிராமம் ஒன்றில் மக்கள் போராட்டக் குழுவின் நடவடிக்கைகள் தொடர்பாக புலன் விசாரணை நடத்திவிட்டு வாகனம் ஒன்றில் திரும்பிக்கொண்டிருந்தபோது இக் கண்ணிவெடி வெடிக்க வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவம் தொடர்பாக ஆந்திர பிரதேச முதல்வர் விஜய பாஸ்கர ரெட்டி தமது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

---

## கூட்டு இராணுவப் பயிற்சி அமைதியைஆபத்திற்கு உள்ளாக்கும்

### வடகொரியா எச்சரிக்கை

(சியோல்)

தென் கொரியாவும், அமெரிக்காவும் திட்டமிட்டபடி மேற்கொள்ளும் இராணுவப் பயிற்சி நடவடிக்கைகள் கொரியாத் தீபகற்பத்தின் அமைதியை ஆபத்திற்கு உள்ளாக்கும் என்று வடகொரியா எச்சரிக்கை செய்துள்ளது.

வடகொரியாவின் அணுசக்தி ஆய்வுகூடங்களை பார்வையிடுவதற்கு சர்வதேச அணுசக்தி ஏஜென்சிகளை அனுமதிக்கவேண்டும் என்று தென்கொரியாவும் அதன் மேற்கு நேச நாடுகளும் வலியுறுத்தி வரும் வேளையில் வடகொரியா இவ்வாறு எச்சரிக்கை செய்திருப்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

அமெரிக்காவும், தென் கொரியாவும் தமது கூட்டு இராணுவ பயிற்சி நடவடிக்கைகளை நேற்று திட்டமிட்டபடி ஆரம்பித்துள்ளது தெரிந்ததே.

### அவசர உத்தரவு

வடகொரிய அரசாங்கம் தனது இராணுவத்தைச் சேர்ந்த அனைவரும் தலைமுடிகளை வெட்ட வேண்டுமென உத்தரவு பிறப்பித்துள்ளது. பத்து லட்சம் பேர் கொண்ட வடகொரிய இராணுவத்திற்கு இக்கடுமையான உத்தரவு அண்மையில் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தில் கீழ்ப்படிவு என்பதற்கு முதலிடம் தரப்பட வேண்டும் எனவும், அதற்காக தலைமுடியை வெட்டிய பின் போராட்டத்திற்குத் தயாராக வேண்டும் எனவும் இவ்உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீரச்சாவு

### யமுனா (தேவசுஜி)

கீரிமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி இரத்தினம் சுபத்திரா (யமுனா) (தேவசுஜி), பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவர் இரத்தினம் செல்வமணி தம்பதிகளின் அன்பு மகளும், ரஞ்சிதா, சித்திரா. பிறேம்குமார், விஜயா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகதீஸ்வரனின் அன்பு மைத்துனியும், இளைய பிள்ளையின் அன்புப் பேர்த்தியும், நரசிங்கம், காலம் சென்ற வயிரமுத்து, மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேருக்கும் அறியத்தருகின்றோம்.

தற்போதைய முகவரி:
சிறிமகால்,
Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
இ. பிறேம்குமார் (ரவி)

(6592)

### வீரவேங்கை மலரோன்

[அருமைநாயகம் முரளிதரன் - ஈஸ்வரன்]

11. 11. 93 அன்று பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவர் காலஞ்சென்ற மு. அருமைநாயகம் (முத்துக்கிளி), திருமதி அ. திலகவதியின் அன்பு மகனும், அனுராதா, அனுஷா (போராளி) ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
கோப்பாய் வீதி,
உரும்பராய் கிழக்கு

தகவல்:
அனுராதா (சகோதரி)
வீரமாணிக்கதேவன்துறை
மயிலிட்டித்துறை.

(6588)

### வீரவேங்கை மணிமாறன்

செல்வன் தம்பிராஜா இர்குலதரன்

[பூநகரி சமரில் வீரச்சாவு அடைந்தவர்]

கருகம்பனை காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும் உரும்பராய் மேற்கை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட செல்வன் தம்பிராஜா இரகுலதரன் வீரச்சாவு அடைந்து விட்டார். இவர் வே. தம்பிராஜா [இளவாலை மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாலய அதிபர்] இராசமணியின் அன்பு மகனும், சிறீமுரளிதரன் [யாழ். பல்கலைக்கழக 2-ம் வருட கலைத்துறை மாணவன்], கெங்காதரன், கங்காதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

''கமலவாசா''
உரும்பராய் மேற்கு,
உரும்பராய்.

தகவல்:
வே. தம்பிராஜா

(6591)

### வீரவேங்கை பழனிவேல் (கண்ணா)

சங்கரப்பிள்ளை யஞ்சேந்திரன்

வேலணை 5ஆம் வட்டாரம்

இவர் சங்கரப்பிள்ளை நாகபூரணியின் அன்பு மகன்

# செயலக ஊழியர்களின் உயிருக்கு உத்தரவாதம் தருக

## யாழ். அரச அதிபர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலகம் தொடர்ந்து இயங்குவதற்கு செயலக ஊழியர்களின் உயிருக்கு உத்தரவாதமளிக்கும்படி யாழ். அரச அதிபர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளார்.

சிறிலங்கா விமானப் படையினரின் குண்டுவீச்சுத் தாக்குதல்களால் சேதமடைந்த யாழ். செயலகக் கட்டடத்தின் கீழ்த்தளத்தில் செயலகத்தின் அலுவலகங்கள் தொடர்ந்தும் இயங்குவதற்கு அங்கு கடமையாற்றும் அனைத்து ஊழியர்களின் உயிர்களுக்கும் அரசு உத்தரவாதமளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கும் அவசர வானொலித் தகவல் ஒன்று நேற்று நண்பகல் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது [க],[ச],[நி]

## இன்று தபால் சேர்க்கவும்

தீவுப்பகுதிகளுக்கான தபால்களைச் சேர்ப்போர் இன்று நண்பகல் 12 00 மணிக்கு முன்பதாக யாழ் பிரதான தபாலகத்தில் சேர்க்குமாறு யாழ் பிரதான தபாலக அதிபர் தெரிவித்தார் இத் தபால் பொதிகள் ''குமண'' கப்பலில் எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் எதிர்வரும் 24ஆம் திகதி பலாலி, மாதகல், இளவாலை ஆகிய பகுதிகளுக்கு தபால்களை எடுத்துச்செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

(பா)

## உதைபந்தாட்டம்

யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பின்வரும் மாவட்ட நிலைப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் 15வயதுப் பிரிவில் யாழ்.இந்துவை எதிர்த்து புனித ஹென்றியரசர் கல்லூரியும், 17வயதுப் பிரிவில் அருணோதயாக் கல்லூரியை எதிர்த்து புனித சாள்ஸ் ம. வித்தியாலயமும் விளையாடும்

யாழ். பல்கலைக் கழக மைதானத்தில் 17வயதுப் பிரிவில் புனிதயோசப்பை எதிர்த்து நவாந்துறை றோ. கவும், 19வயதுப் பிரிவில் விக்டோரியாக் கல்லூரியை எதிர்த்து நாவாந்துறை றோ. கவும் விளையாடும்.

### கொழும்பு

உலங்குவானூர்திகள் மூலம் கொழும்பிற்கு கொண்டுவரப்படுகின்றனர் வேறு சிலர் அநுராதபுரம் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப் பட்டுள்ளனர். இரத்மலானை விமான நிலையத்திலிருந்து அம்புலன்ஸ் வாகனங்களின் ஓட்டம் காலி வீதியில் அதிகமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### கடற்கரும்புலிகளின்

அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது இதனையடுத்து இன்பருட்டி கடற்கரை வீதி வழியாக வல்வெட்டித்துறை, உடுப்பிட்டிவல்லை யூடாக அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் ஊடாக மாலை 4.00 மணிக்கு புத்தூர் மாவீரர் மண்டபத்தை வந்தடையும்.

அங்கு அஞ்சலிக் கூட்டம் நடத்தப்பட்டு, அதன் பின் ஊர் வலமாக கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு வந்தடைந்ததும் அங்கு கடற்கரும்புலி மேஜர் கணேசுக்கு நினைவுக் கல்நாட்டப்படவுள்ளது.

இந்நிகழ்வு நேற்றையதினம் நடைபெறுவதாக இருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெறவில்லை எனவும் இன்று திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### கிளிநொச்சி

### உடன் பணிக்கு

மருத்துவர்களை நேற்று நண்பகலுக்கு முன்பாக வைத்தியசாலைக்கு பணிக்கு திரும்புமாறு கேட்கப்பட்டது.

பூநகரியில் காயமடைந்த படையினர் அங்கு சென்றுள்ள மேலதிக படையினரால் மீட்டெடுக்கப்பட்டு பலாலி விமானத் தளத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்துவிமானங்கள் மூலம் கொழும்பிற்கு எடுத்து வரப்பட்டனர்.

இத் தாக்குதலின்போது படுகாயமடைந்த படையினருக்கு இயன்றவரை உதவிபுரியும்படி மருத்துவர்களையும், மக்களையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க கேட்டுள்ளார்.

மேற்படி படைத்தளத்தில் விடுதலைப்புலிகளுடன் நடைபெற்ற யுத்தத்தின்போது படுகாயமடைந்த நூற்றுக்கான சிறிலங்கா படையினர் கொழும்பிலுள்ள பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் ஏனைய உதவிகளைச் செய்வதற்கும் மருத்துவர்களையும், மக்களையும் உடனடியாக முன்வரும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா அவசர அழைப்பு விடுத்துள்ளார்.

### தெற்கில்

மடைந்த படையினருக்கு சிகிச்சை அளிக்கவும் மரணமடைந்த காணாமல் போன படையினரின் குடும்பங்களுக்கு

### பூநகரிக்கு

கூறியுள்ளனர். காயமடைந்த அப்படையினர் பலாலியில் விமானத்தில் ஏற்றப்பட்டு கொழும்பிற்கு அனுப்பப்பட்டதையும் தாம் நேரில் அவதானித்ததாகவும் அவர்கள் கூறினர் பல படையினர் தலையிலும் கைகளிலும் காயமடைந்துள்ளனர். பல படையினர் கால்களை இழக்கும் நிலையில் இருந்ததை அவதானித்ததாகவும் அப்பத்திரிகையாளர்கள் கூறினர்.

### வீரச்சாவு

(முருகேசு திராவிடமுத்து இல 39, 15 ஆம் கிராமம் அம்பாறை) லெப்டினன்ட் திண்ணியன் / ரங்கா (கணபதிப்பிள்ளை கருணாநிதி குருமண்வெளி களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு) ஆகிய போராளிகளே வீரச்சாவு அடைந்தவர்களாவர் இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்

### தேவைவரின்

பூநகரியில் காயமடைந்த படையினருக்கு சிகிச்சை அளிக்கும் முகமாக

## உள்ளில் சுவடுசுமக்கும் 31-ம் நாள்



அமரர்

### திருமதி செல்லம்மா பொன்னுத்துரை

(பிறந்தகம்: தாவடி புக்ககம்: கோண்டாவில் மேற்கு)

பூவுடல்: 1924 06-04

புகழுடல்: 1993-10 17

''மறுபிறப்பு என்று உண்டா?''

''இல்லை. நம்பவில்லை!''

''திடமாகவா?''

''உறுதிமேல் உறுதியாக! ஆனால்...
அப்படி ஒன்று இருந்தால் ... அதுவே
இப்போது நெஞ்சில் நிறைந்து வாட்டும்...''

''காரணம்?''

''மீண்டும் பிறக்க வேண்டும் — அம்மா
மகாராணியாய் ... அருகே நான் ஒரு
அடிமையாய்!''

''ஓ, தாய்மைக்கு பிரதியுபகாரமோ?
ஆனால் இதுவே ஈடாகி விடுமா?''

''நிச்சயமாக இல்லை. கோடிமுறை பிறக்க
வேண்டும் — அம்மா மகாராணியாய்; நான்
ஆயுள் முழுவதும் அருகே அடிமையாய்!''

[அம்மாவின் வாழ்வோடிணைந்த அனைத்துக்கும் நன்றி.]

பிள்ளைகள், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

((6593)

## மரண அறிவித்தல்கள்

சமணியின் அன்பு மகனும், ஸ்ரீமுரளிதரன் [யாழ் பல்கலைக்கழக 2-ம் வருட கலைத்துறை மாணவன்], கெங்காதரன், கங்காதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்

''கமலவாசா''
உரும்பராய் மேற்கு,
உரும்பராய். (6591)

தகவல்:
வே. தம்பிராஜா

---

## வீரவேங்கை பழனிவேல் (கண்ணா)

### சங்கரப்பிள்ளை யஞ்சேந்திரன்

### வேலணை 5ஆம் வட்டாரம்

இவர் சங்கரப்பிள்ளை நாகபூரணியின் அன்பு மகன் ஆவார் இவர் பூநகரிமுகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார். இவரது வித்துடல் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் புதைகுழியில் விதைக்கப் பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!
தந்தை, தாய், சகோதரர்கள்.

நாவலர் வீதி,
5 சந்தி - 700,
யாழ்ப்பாணம். (6594)

---



## வீரவேங்கை கருணா/அன்பு

### (சுப்பிரமணியம் வனிதகுரு)

பிறப்பு: 22-07-1976 வீரச்சாவு: 11-11-1993

இவர் வடமராட்சி கிழக்கு அம்பனைச் சேர்ந்த திரு. திருமதி க. சுப்பிரமணியம் அரியமலர் தம்பதிகளின் அன்பு மகனும், வசந்தகுமாரி, வசந்தகுமார், வரதகுமார், வனிதகுமார், வற்சலா, வரதகுலம், வசந்தகுகன், வசந்தலா ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி க.சிவக்கொழுந்துவின் அன்புப்பேரனுமாவார். அன்னார் 11-11-93ல் பூநகரிமுகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்து 14-11-93 வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் புதைகுழியில் விதைக்கப்பட்டார் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
சு. வசந்தகுமார் (வசந்தன்)
சகோதரன்

அம்பன்,
வடமராட்சி கிழக்கு.
(6590)

---

யும்.

அங்கு அஞ்சலிக் கூட்டம் நடத்தப்பட்டு, அதன் பின் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்திற்கு வந்தடைந்ததும் அங்கு கடற்கரும்புலி மேஜர் கணேசுக்கு நினைவுக் கல்நாட்டப்படவுள்ளது.

இந்நிகழ்வு நேற்றையதினம் நடைபெறுவதாக இருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெறவில்லை எனவும் இன்று திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### கிளிநொச்சி

யார் வைத்தியசாலை, புனித திரேசம்மாள் ஆலயம் என்பன சேதமடைந்தன. இந்த ஆலயத்தில் அப்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட கொழும்பிலிருந்து வந்த பயணிகள் தங்கியிருந்தனர். சிதறியோடிய பலர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம், அருகில் உள்ள கற்பகச்சுவையகம், நில அளவையாளர் வீடு, சென் திரேசா ஆலயம் ஆகியவையும் சேதங்களுக்குள்ளாகின.

இத் தாக்குதலின் பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி பிலிப் என்பவர் இந்த வைத்தியசாலைப் பகுதியைப் பார்வையிட்டுச் சென்றார்.

இதேசமயம், வன்னிப் பகுதியில் உள்ள பொது அமைப்புகள் சிறிலங்கா விமானப் படையின் இக் குண்டுவீச்சு நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளுடன் நடைபெற்ற யுத்தத்தின்போது படுகாயமடைந்த நூற்றுக்கான சிறிலங்கா படையினர் கொழும்பிலுள்ள பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் ஏனைய உதவிகளைச் செய்வதற்கும் மருத்துவர்களையும், மக்களையும் உடனடியாக முன்வரும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா அவசர அழைப்பு விடுத்துள்ளார்.

### தெற்கில்

மடைந்த படையினருக்கு சிகிச்சை அளிக்கவும் மரணமடைந்த காணாமல் போன படையினரின் குடும்பங்களுக்கு உதவவும் முடியும் என அவர் தெரிவித்தார்.

''எனவே தற்போது வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபடாது அமைதி காக்க வேண்டும்'' எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நிலையில் இருந்ததை அவதானித்ததாகவும் அப்பத்திரிகையாளர்கள் கூறினர்.

### வீரச்சாவு

(முருகேசு திராவிடமுத்து இல 39, 15 ஆம் கிராமம் அம்பாறை) லெப்டினன்ட் திண்ணியன் / ரங்கா (கணபதிப்பிள்ளை கருணாநிதி குருமண்வெளி களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு) ஆகிய போராளிகளே வீரச்சாவு அடைந்தவர்களாவர் இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்

### தேவைவரின்

பூநகரியில் காயமடைந்த படையினருக்கு சிகிச்சை அளிக்கும் முகமாக வைத்திய நிபுணர் குழுக்கள் இப்பகுதிகளுக்கு விரைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது இதற்கென தென்னிலங்கையில் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் உள்ள வைத்திய நிபுணர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது

---

## கண்ணீர் அஞ்சலி

## வீரவேங்கை கமிலோ

### நவரத்தினம் கருணவேல்

### சில்லாலை வீதி, பண்டத்தரிப்பு

பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்தார் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் போராளிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இன்று இவரது வித்துடல் இவரது இல்லத்தில் இருந்து 12 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சகோதரர்-ரமன்

53, A. V. வீதி,
கொழும்புத்துறை. (6597)

---

### பரீட்சைச் சபை - கல்வித்திணைக்களம் – யாழ்ப்பாணம்

## ஆண்டிறுதித் தேர்வு 1993 - நேரசூசி

15-11-93 ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகும் என எம்மால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட்ட நேரசூசி பின்வருமாறு மாற்றப்பட்டு - தேர்வு நடைபெறும்.

1ஆம் நாள் — 19.11.93 வெள்ளி 2ஆம் நாள் 2).11 93 சனி
3ஆம் நாள் — 29.11.93 திங்கள் 4ஆம் நாள் 30.11.93 செவ்வாய்
5ஆம் நாள் — 01.12.93 புதன் 6ஆம் நாள் 02 12 93 வியாழன்
7ஆம் நாள் — 03.12.93 வெள்ளி 8ஆம் நாள் 04 12.93 சனி முற்பகல்
9ஆம் நாள் — 04.12 93 சனி பிற்பகல்

நேரசூசி மாற்றத்தை அவதானித்துத் தேர்வினை செவ்வனே நடாத்துமாறு சகல பாடசாலை அதிபர்களும் வேண்டப்படுகின்றனர்.

துரை தியாகராசா
செயலாளர்
பரீட்சைச்சபை

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
16-11-93

குறிப்பு: இரண்டாம் கட்ட வினாத்தாள்களை பெறுவதற்கு சகல கொத்தணி உதவியாளர்களும் 25-11-1993 முற்பகல் 9-00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குச் சமுகம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(சி 7941)

---

இப்போது நெஞ்சில் நிறைந்து வாட்டும்...''

''காரணம்?''

''மீண்டும் பிறக்க வேண்டும் — அம்மா மகாராணியாய் ... அருகே நான் ஒரு அடிமையாய்!''

''ஓ, தாய்மைக்கு பிரதியுபகாரமோ? ஆனால் இதுவே ஈடாகி விடுமா?''

''நிச்சயமாக இல்லை. கோடிமுறை பிறக்க வேண்டும் – அம்மா மகாராணியாய்; நான் ஆயுள் முழுவதும் அருகே அடிமையாய்!''

[அம்மாவின் வாழ்வோடிணைந்த அனைத்துக்கும் நன்றி.]

பிள்ளைகள், மருமக்கள்,
பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்.

((6593)

---

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து சின்னத்துரை

### [ஆசாரியார்]

சங்கானை காளிகோவிலடியை பிறப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்கள் முத்தாச்சி, வயித்திலிங்கம், செல்லையா, செல்லம்மா ஆகியோரின் அன்பு சகோதரரும், நாகராசா (வவுனியா), கந்தசாமி, தேவதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு தகப்பனாரும், சிறிகாந்தராசா, கல்பனா, பகிர்தரன், வினோதன், பிரிந்தா, றஜிதா, பார்த்திபன், யோசிதா, சயந்தன் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பி. ப. 01 மணியளவில் நடைபெற்று கரைச்சிமயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. கந்தசாமி
(மகன்)

காளிகோவிலடி
சங்கானை.

(6595)

---

## திரு.சம்பந்தர் சின்னத்தம்பி

குப்பிளானை பிறப்பிடமாகவும், தற்போது களவாவோடை ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சம்பந்தர் சின்னத்தம்பி நேற்றுக் காலமானார். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், இராசேந்திரம் (ஆசிரியர் உரும்பராய்), ஆனந்தன் (ப.நோ.கூ. சங்கம் சுன்னாகம்), மனோன்மணி, ஞானதேவி ஆகியோரின் தகப்பனாரும், சிவஞானசுந்தரம் (சமூகசேவை அலுவலர் கோப்பாய் உ.அ அ. பணிமனை), சுகுமாரன் (சுவிஸ்), யானகி, கணேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றதம்பிராசா (ஆசிரியர்), வயித்திலிங்கம் காலஞ்சென்ற பொன்னம்மா, சின்னம்மாஆகியோரின் சகோதரரும்கணேசநாதன், சுதர்சினி, சிவதர்சினி, ஞானரூபினி, கேசவன், சதன், கபிலன், கனிமொழி, கமலவாணி, மேனகன், மேனரூபன், கசன். கமலை ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். ஈமக்கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 1மணிக்கு குப்பிளான் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சி. ஆனந்தன்
(மகன்)

களவாவோடை
ஏழாலை.

(6596)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.